**கவனிக்க.-** *16.11.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1786 - 2012 නොවැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2012.11.23

*1786 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1470 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1502 |


**கவனிக்க.-** (i) *குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2012, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *பியசேன கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2012, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரச சேவை ஆணைக்குழுச் சபை

கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளல்

கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 272 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2012.12.13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வெற்றிடம் எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பப்படிவம் தமது திணைக்களப் பொறுப்பாளர் ஊடாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உரிய தினத்துக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **தமைமைகள்** (அட்டவணை 1 இனைப் பார்க்கவும்).- விண்ணப்பிக்கும் பாடவிதானம் பிரதான பாடங்களில் ஒன்றாக பட்டத்துக்காகத் தொடர்ந்திருப்பது அத்தியாவசியம் என்பதுடன் பட்டத்துக்காகத் தொடரும் மொத்தப் பாடப் பிரிவுகளின் எண்ணிக்கையில் 1/3 விண்ணப்பிக்கும் பாடத்துக்குரியதான பாடமாக இருத்தல் வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிமுறைகள் :**

4.1 அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபை மற்றும் புள்ளி வழங்கும் ஒழுங்குவிதிமுறைகளுக்கு அமைய நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சபை மூலம் நடாத்தப்படும் மற்றும் பிரயோகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய சேர்த்துக்கொள்ளப்படும் (உரிய புள்ளி வழங்கும் ஒழுங்குவிதிமுறை அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

4.2 நேர்முகப் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் முதற்பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :

4.2.1 பிறப்புச் சான்றிதழ் (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழ் அல்லது ஞானஸ்ஞான சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

4.2.2 பட்டச் சான்றிதழ் அல்லது கல்வித் தகைமைகள் தொடர்பான ஏனைய சான்றிதழ்கள்

4.2.3 தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ்கள்

4.2.4 சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூல அறிவு தொடர்பாகப் பெற்றுள்ள உயர் சான்றிதழ்

4.3 ஒரு பாடத்துறையின்கீழ் 3 நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்க முடிவதுடன் ஒரு பாடத்துறையைவிடக் கூடுதலாக விண்ணப்பிப்பதாயின் அதற்காகத் தனியான விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பெற்றுக்கொள்ளும் புள்ளித் தொடரை அடிப்படையாகக் கொண்டு கல்விக் கல்லூரியின் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்தன் பின்னர் தொடராக ஆசிரிய கல்லூரி மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களின் வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படும்.

4.4 3 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமை விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள (அட்டவணை 1) பாட இலக்கம் 10-III, IV இன்கீழ், பாட இலக்கம் 13-III இன்கீழ், பாட இலக்கம் 19-III இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையின் அடிப்படையில் விண்ணப்பித்து நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் நியமனம்பெற்று ஐந்து (5) வருடங்கள் கடக்கும் முன்னர் அவ்வவ் விடயத்துக்குரியதான வர்த்தமானி அறிவித்தலின் I அல்லது II அல்லது III இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறின்றேல் சேவை முடிவுறுத்தப்படும்.

5. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் :**

5.1 இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய சம்பளம் கொண்டது. விதவைகள், தபுதாரர் ஓய்வூதியச் சம்பளத்திற்குப் பங்களிப்புச் செலுத்த வேண்டும். நியமனத் திகதி தொடக்கம் 3 வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அறிவித்தலின் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் இலங்கை ஆசிரிய சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை அல்லது இலங்கை கல்வி நிர்வாக

சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் 3 வருடகால திருப்திகரமான சேவை அனுபவத்தை தகைமையாகக் குறிப்பிடப்பட்டுள்ள குழுவில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மற்றும் விண்ணப்பம் கோரும் இறுதித் தினமன்று 3 வருடகால சேவை அனுபவம் கொண்ட தேசிய கல்விக் கல்லூரி மற்றும் ஆசிரிய கல்விக் கல்லூரிகளில் கடமை பொருட்டு அடிப்படையில் சேவையாற்றியுள்ள இணைப்புச் செய்யப்பட்டுள்ள விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களில் முகாமையாளர் பதவிகளில் கடமை தழுவல்களை மேற்கொண்டு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

5.2 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12:1 மற்றும் 12:6 தொடக்கம் 12:12 வரையான வாசகங்களுக்கும் அரச சேவை ஆணைக்குழுச் சபையின் செயற்பாட்டு ஒழுங்குமுறைச் சட்டங்களும் உரியதாகும்.

5.3 இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்புக்கு நியமனம் பெற்று 3 வருடங்கள் கடக்கும் முன்னர் 1 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையிலும், 6 வருடங்கள் கடக்க முன்னர் 2 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5.4 பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 (ii) இற்கமைய ஏனைய அரச மொழி தொடர்பாக உரிய தேர்ச்சி மட்டத்தை நியமனத் திகதி தொடக்கம் ஐந்து (05) வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களினால் மூன்று வருடங்களுக்குள் ஒரு அரச மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் ஏனைய அரச மொழி தொடர்பாக ஆறு (06) வருடங்களுக்குள் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.5 வதிவிட வசதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில் கல்விக் கல்லூரி எல்லைக்குள் வதிய வேண்டும். வதிவிட வசதிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட தூர அளவுக்குள் வதிய அனுமதி வழங்கப்படும். இருப்பினும் கல்விக் கல்லூரி எல்லைக்குள் வீட்டு வசதிகள் வழங்கப்படும் பட்சத்தில் அதில் வதிய வேண்டும்.

**6. வயதெல்லை :**

6.1 2011.12.31 ஆந் திகதி 22 வயதுக்குக் குறையாது 30 வயதினைவிட மேற்படாது இருத்தல் வேண்டும்.

6.2 அறிவித்தலின் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ஆசிரிய சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நிரந்தர நியமனத்தை வகிக்கும் மூன்று (03) வருட கால திருப்திகரமான சேவை அனுபவம் தகைமையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் ஊடாக விண்ணப்பிக்கும் இலங்கை ஆசிரிய சேவை அல்லது இலங்கை அதிபர் சேவையின் அல்லது இலங்கை கல்வி நிருவாக சேவையின் உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

6.3 இச்சந்தர்ப்பத்தில் மாத்திரம் விண்ணப்பங்கோரும் இறுதித் தினமன்று மூன்று வருட கால சேவைக்காலத்தைக் கொண்ட தேசிய கல்விக் கல்லூரி மற்றும் ஆசிரிய கல்லூரிகளில் கடமை பொருட்டு அடிப்படையில் சேவையாற்றும் இணைப்புச் செய்யப்பட்டுள்ள விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களின் முகாமைத்துவப் பதவிகளில் கடமைத் தழுவலினை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு எப்பிரிவில் விண்ணப்பித்த போதிலும் உயர்ந்தபட்ச வயதெல்லை கருத்திக்கொள்ளப்பட மாட்டாது.

**7. பொதுவான தகைமைகள் :**

7.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்

7.2 நற்சான்றிதழ் மற்றும் நாட்டின் எந்தப் பிரதேசங்களிலும் சேவையாற்றக்கூடிய தேகாரோக்கியம் கொண்டவராக இருக்க வேண்டும்.

7.3 விண்ணப்பம் கோரும் இறுதித் தினமன்று பதவிக்குச் சேர்த்துக்கொள்ளத் தேவையான சகல தகைமைகளையும் பூரணப்படுத்த வேண்டுமென விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் தினமன்று அத்தகைமைகளை சகல முறைகளிலும் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

7.4 ஆங்கில மொழி தொடர்பான சிறந்த அறிவு கொண்ட விண்ணப்பதாரிகள் தொடர்பில் விசேடமாகக் கருத்திற்கொள்ளப்படும்.

**8. சம்பள அளவுத்திட்டம்.**- இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பு- ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூபா 53,555.

**குறிப்பு** :

* ஏதேனும் சான்றிதழ் அல்லது போட்டோப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பக் கூடாது.
* நேர்முகப் பரீட்சையின்போது தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அவரது விண்ணப்பப்படிவம் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
* அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகள் பூர்த்திசெய்யப்படுவது (வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொண்ட சான்றிதழுக்கு அமைய) ஆயின் அப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுச் சபையினால் அங்கீரிக்கப்பட்ட நிறுவகமாகப் பெற்றுக்கொண்ட உறுதிப்படுத்தல் சான்றிதழ் நேர்முகப் பரீட்சையின்போது கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
* தற்போது அரச சேவையில் இல்லாத விண்ணப்பதாரர்களின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், வழக்கறிஞர் அல்லது ரூபா 2,40,360 வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
* இவ்வெற்றிடத்தினை நிரப்புவது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரசசேவை ஆணைக்குழுச் சபையின் உத்தரவுக்கமைய,

எஸ். எம். கோடாபய ஜயரட்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

**அட்டவணை - 1**

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | தொழில்சார் பட்டம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கல்வி தொடர்பான முதலாவது அல்லது இரண்டாவது (உயர்) பட்டம் பெற்றிருத்தல் அல்லது கல்வி தொடர்பான உயர் பட்டத்தினைப் பெற்றிருத்தல் (வயது 22-30) | சிங்களம் | ஊவா தே. க. க., சிறிபாத தே. க. க., வடமேல் தே. க. க. |
| | | | | ஆசிரியர் கல்லூரி |
| | | | | கிராகம ஆ. க. |
| | | அல்லது | | வடமத்திய மாகாண ஆசிரிய மத்திய நிலையம் |
| | | (ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பட்டம் மற்றும் அதிவிசேட அல்லது திறமைச்சித்தி கொண்ட பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30) | | ஹிங்குராக்கொட ஆ. ம. நி., மன்னம்பிட்டிய ஆ. ம. நி., தம்புத்தேகம ஆ. ம. நி., கலென்பிந்துனுவெவ ஆ. ம. நி., பொலன்னறுவை ஆ. ம. நி., பதவிய ஆ. ம. நி., பக்கமுன ஆ. ம. நி., அனுராதபுரம் ஆ. ம. நி., கெக்கிராவை |
| | | அல்லது | | |
| | | (iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் அல்லது பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா அல்லது பட்டம் மற்றும் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின், அதிபர் சேவையின் அல்லது கல்வி நிர்வாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் மூன்றாண்டு கால திருப்திகரமான சேவைக்கால அனுபவம் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் (வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது) | | சப்பிரகமுவ மாகாண ஆ. ம. நி. |
| | | | | பலாங்கொடை ஆ. ம. நி., தெரணியகலை ஆ. ம. நி., இரத்தினபுரி ஆ. ம. நி., தெஹியோவிட்ட ஆ. ம. நி., கலவானை ஆ. ம. நி., மாவனல்லை ஆ. ம. நி., எம்பிலிபிட்டிய ஆ. ம. நி., கேகாலை ஆ. ம. நி. |
| | | | | ஊவா மாகாண ஆ. ம. நி. |
| | | | | மொனராகலை ஆ. ம. நி., வெல்லவாய ஆ. ம. நி., பண்டாரவளை ஆ. ம. நி., பிபில |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | ஆ. ம. நி., ஹாலிஎல ஆ. ம. நி., |
| | | | | கிழக்கு மாகாண ஆ. ம. நி. |
| | | | | மஹியங்கனை ஆ. ம. நி., வெலிமடை ஆ. ம. நி. |
| | | | | அம்பாறை ஆ. ம. நி., தெஹியத்தகண்டிய ஆ. ம. நி., கந்தளாய் ஆ. ம. நி. |
| | | | | மத்திய மாகாண ஆ. ம. நி. |
| | | | | நுவரெலியா ஆ. ம. நி., வளல ஆ. ம. நி., ஹட்டன் ஆ. ம. நி., கலேவெல ஆ. ம. நி., கொத்மலை ஆ. ம. நி., நில்தண்டாஹின்ன ஆ. ம. நி., கம்பளை ஆ. ம. நி., உடுதும்பற ஆ. ம. நி., மாத்தளை ஆ. ம. நி., கட்டுகஸ்தோட்டை ஆ. ம. நி., பதியபெலல ஆ. ம. நி., ஹிராகம ஆ. ம. நி. |
| | | | | தென் மாகாண ஆ. ம. நி. |
| | | | | தெனியாய, தங்கல்ல, வீரக்கெட்டிய, அம்பாந்தோட்டை, லுணுகம்வெஹர, தெஹியந்தலை, அக்குரெஸ்ஸ, எல்பிட்டிய, பனங்கல, வலப்பிட்டிய, திக்வெல்ல, மாத்தறை, உணவட்டுன |
| | | | | வடமேல் மாகாண ஆ. ம. நி. |
| | | | | மஹவ ஆ. ம. நி., புத்தளம் ஆ. ம. நி., ஆனமடுவ ஆ. ம. நி., நாத்தாண்டிய ஆ. ம. நி. |
| | | | | மேல் மாகாண ஆ. ம. நி. |
| | | | | களுபோவில ஆ. ம. நி., போலவளான ஆ. ம. நி., அளுத்கம ஆ. ம. நி., ஹொரணை ஆ. ம. நி. |
| | | | தமிழ் | மகாவலி தே. க. க. |
| | | | | அட்டாளைச்சேனை தே. க. க., சிறிபா தே. க. க., மட்டக்களப்பு தே. க. க., யாழ். தே. க. க., தர்காநகர் தே. க. க., |
| | | | | ஆசிரியர் கல்லூரி |
| | | | | கோப்பாய் ஆ. க. |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | ஊவா மாகாண ஆ. ம. நி. |
| | | | | பஸ்ஸர ஆ. ம. நி. |
| | | | | கிழக்கு மாகாண ஆ. ம. நி. |
| | | | | களுவாஞ்சிக்குடி ஆ. ம. நி., அக்கரைப்பற்று ஆ. ம. நி., மட்டக்களப்பு ஆ. ம. நி., கல்குடா ஆ. ம. நி., திருகோணமலை, செரன்கந்த, சம்மாந்துறை, கல்முனை, மூதூர், மட்டக்களப்பு, சிங்கள ம. வி. (திருகோணமலை), கிண்ணியா |
| | | | | வட மாகாணம் |
| | | | | வேலணை, தென்மராட்சி, மாங்குளம், நிழலடி, யாழ்ப்பாணம், பரந்தன், அக்கராயன், முல்லியாவலை, மன்னார், முருங்கன், புளியங்குளம், வெண்டிக்குளம், மடு, வலிகாமம் |
| | | | ஆங்கிலம் | நில்வளா தே. க. க., சிறிபாத தே. க. க., பஸ்துன்கரட்ட தே. க. க., யாழ். தே. க. க., தர்காநகர் தே. க. க., பேராதனை தே. க. க. |
| 2 | இரண்டாம் மொழி சிங்களம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சிங்கள மொழியுடன் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச்சித்தியுடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30) | சிங்களம் | வவுனியா தே. க. க., சிறிபாத தே. க. க., அட்டாளைச்சேனை தே. க. க., மட்டக்களப்பு தே. க. க., வடமேல் தே. க. க., ருகுணு தே. க. க., தர்காநகர் தே. க. க., யாழ். தே. க. க. |
| | | அல்லது | | ஆசிரிய கல்லூரி |
| | | (ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சிங்கள மொழியுடன் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது சிங்கள மொழியுடன் பட்டம் பெற்றிருத்தல் ; அத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின், அதிபர் சேவையின் அல்லது கல்வி நிருவாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் மூன்றாண்டு கால திருப்திகரமான சேவைக்கால அனுபவம் கொண்ட | | மட்டக்களப்பு ஆ. க., கொட்டகலை ஆ. க. |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தராக இருத்தல் (வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது)<br><br>**குறிப்பு**.- மேற்கூறப்பட்ட (i) அல்லது (ii) இன் தகைமைகளுக்கு மேலதிகமாக க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி தமிழ் மொழியில் சித்தியடைந்திருத்தல் விசேட தகைமையாகக் கருத்திற்கொள்ளப்படும். | | |
| 3 | இரண்டாம் மொழி தமிழ் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தமிழ் மொழியுடன் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச்சித்தியுடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30)<br><br>அல்லது<br><br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தமிழ் மொழியுடன் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது தமிழ் மொழியுடன் பட்டம் பெற்றிருத்தல் ; அத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின், அதிபர் சேவையின் அல்லது கல்வி நிருவாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் மூன்றாண்டு கால திருப்திகரமான சேவைக்கால அனுபவம் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் (வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது)<br><br>**குறிப்பு**.- மேற்கூறப்பட்ட (i) அல்லது (ii) இன் தகைமைகளுக்கு மேலதிகமாக க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்கள மொழியில் சித்தியடைந்திருத்தல் விசேட தகைமையாகக் கருத்திற்கொள்ளப்படும். | தமிழ் | ஊவா தே. க. க., நில்வளா தே. க. க., சியனா தே. க. க., ஹாப்பிட்டிகம தே. க. க., சிறிபாத தே. க. க., பஸ்துன்ரட்ட தே. க. க., புலஸ்திபுர தே. க. க., வடமேல் தே. க. க., ருவன்புர தே. க. க., ருகுணு தே. க. க., யாழ். தே. க. க., சாரிபுத்த தே. க. க.<br><br>ஆசிரிய கல்லூரி<br><br>அட்டாளைச்சேனை ஆ. க., உனவட்டுண ஆ. க., பலப்பிட்டிய ஆ. க., மஹரகம ஆ. க., கிராகம ஆ. க. |
| 4 | சித்திரம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சித்திரப் பாடத்துடன் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச்சித்தியுடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30)<br><br>அல்லது | சிங்களம் | ஊவா தே. க. க., நில்வளா தே. க. க., சாரிபுத்திர தே. க. க., சியனா தே. க. க., ஹாப்பிட்டிகம தே. க. க., பஸ்துன்ரட்ட தே. க. க., புளஸ்திபுர தே. க. க., வடமேல் தே. க. க., ருவன்புர தே. க. க., ருகுணு தே. க. க. |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| | | (ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சித்திரப் பாடத்துடன் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது சித்திரப் பாடத்துடன் பட்டம் பெற்றிருத்தல் ; அத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின், அதிபர் சேவையின் அல்லது கல்வி நிருவாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் மூன்றாண்டு கால திருப்திகரமான சேவைக்கால அனுபவம் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் (வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது) | | ஆசிரிய கல்லூரி<br>மஹரகம ஆ. க., உனவட்டுண ஆ. க., கிராமகம ஆ. க.<br>ஊவா மாகாண ஆ. ம. நி.<br>பிபில, மெதகம<br>தென் மாகாண ஆ. ம. நி.<br>தங்காலை<br>மேல் மாகாண ஆ. ம. நி.<br>மினுவன்கொட |
| | | | தமிழ் | வவுனியா தே. க. க., சிறிபாத தே. க. க.<br>அட்டாளைச்சேனை தே. க. க., மட்டக்களப்பு தே. க. க., யாழ். தே. க. க.<br>ஆசிரிய கல்லூரி<br>கொட்டகல ஆ. க., கோப்பாய் ஆ. க., மட்டக்களப்பு ஆ. க. |
| 5 | சங்கீதம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சங்கீதப் பாடத்துடன் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச்சித்தியுடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30)<br>அல்லது<br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சங்கீதப் பாடத்துடன் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது சங்கீதப் பாடத்துடன் பட்டம் பெற்றிருத்தல் ; அத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின், அதிபர் சேவையின் அல்லது கல்வி நிருவாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் மூன்றாண்டு கால திருப்திகரமான சேவைக்கால அனுபவம் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் (வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது) | சிங்களம் | ஊவா தே. க. க., நில்வளா தே. க. க., சாரிபுத்திர தே. க. க., சியனா தே. க. க., ஹாப்பிட்டிகம தே. க. க., பஸ்துன்ரட்ட தே. க. க., புளஸ்திபுர தே. க. க., ருவன்புர தே. க. க., ருகுணு தே. க. க., சிறிபாத தே. க. க.<br>ஆசிரிய கல்லூரி<br>கிராகம ஆ. க.<br>வடமத்திய மாகாணம்<br>கலென்பிந்துனுவெவ<br>மத்திய மாகாணம்<br>வளல<br>வடமேல் மாகாணம்<br>குருணாகல் |
| | | | தமிழ் | வவுனியா தே. க. க., சிறிபாத தே. க. க., அட்டாளைச்சேனை தே. க. க., மட்டக்களப்பு தே. க. க., தர்காநகர் தே. க. க., யாழ். தே. க. க. |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | ஆசிரிய கல்லூரி |
| | | | | கொட்டகல ஆ. க., கோப்பாய் ஆ. க., மட்டக்களப்பு ஆ. க. |
| | | | | வடமாகாணம் |
| | | | | வலிகாமம், முல்லியாவெலி |
| 6 | கர்நாடக சங்கீதம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கர்நாடக சங்கீதப் பாடத்துடன் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச்சித்தியுடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30)<br><br>அல்லது<br><br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கர்நாடக சங்கீதப் பாடத்துடன் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது கர்நாடக சங்கீதப் பாடத்துடன் பட்டம் பெற்றிருத்தல் ; அத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின், அதிபர் சேவையின் அல்லது கல்வி நிருவாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் மூன்றாண்டு கால திருப்திகரமான சேவைக்கால அனுபவம் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் (வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாது) | தமிழ் | சிறிபாத தே. க. க. |
| 7 | உயிரியல் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உயிரியல் பாடத்துடன் விஞ்ஞானமாணி பட்டம் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச்சித்தியுடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30)<br><br>அல்லது<br><br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உயிரியல் பாடத்துடன் விஞ்ஞானமாணி முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது உயிரியல் | சிங்களம் | நில்வளா தே. க. க.<br><br>வடமத்திய மாகாண ஆ. ம. நி.<br><br>அனுராதபுரம், தம்புத்தேகம, கலென்பிந்துனுவெவ, கெக்கிராவை<br><br>சப்பிரகமுவ மாகாண ஆ. ம. நி.<br><br>தெரணியகல, தெஹியோவிட்ட, கலவானை<br><br>ஊவா மாகாண ஆ. ம. நி.<br><br>பண்டாரவளை, மஹியங்கனை |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| | | பாடத்துடன் விஞ்ஞானமாணி பட்டம் பெற்றிருத்தல் ; அத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின், அதிபர் சேவையின் அல்லது கல்வி நிருவாக சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் மூன்றாண்டு கால திருப்திகரமான சேவைக்கால அனுபவம் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல் (வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது) | | மத்திய மாகாண ஆ. ம. நி. |
| | | | | நில்தண்டாஹின்ன, பதியபெலல்ல, நாஉல |
| | | | | தென் மாகாண ஆ. ம. நி. |
| | | | | தங்கல்ல, பனன்கல, திக்வெல்ல, அக்குரெஸ்ஸ |
| | | | | வட மாகாண ஆ. ம. நி. |
| | | | | குருணாகலை, மஹவ, ஆனமடுவை |
| | | | | கிழக்கு மாகாண ஆ. ம. நி. |
| | | | | அம்பாறை |
| | | | தமிழ் | ஸ்ரீபாத தே. க. க., மட்டக்களப்பு, யாழ். தே. க. க. |
| | | | | மட்டக்களப்பு ஆ. க. |
| | | | | கிழக்கு மாகாண ஆ. ம. நி. |
| | | | | திருகோணமலை, மட்டக்களப்பு (மத்தி) |
| | | | | வட மாகாண ஆ. ம. நி. |
| | | | | அக்கரயான், யாழ்ப்பாணம் |
| | | | ஆங்கிலம் | நில்வளா தே. க. க., யாழ். தே. க. க. |
| 8 | இரசாயனவியல் | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் இரசாயனவியல் பாடத்துடன் விஞ்ஞானமாணி பட்டம் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச்சித்தியுடன் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் (வயது 22 - 30) | சிங்களம் | நில்வளா தே. க. க. |
| | | அல்லது | | வடமத்திய மாகாண ஆ. ம. நி. |
| | | (ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் இரசாயனவியல் பாடத்துடன் விஞ்ஞானமாணி முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பு (விசேட) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது இரசாயனவியல் பாடத்துடன் விஞ்ஞானமாணி பட்டம் பெற்றிருத்தல் ; அத்துடன் | | அனுராதபுரம், தம்புத்தேகம, கலென்பிந்துனுவெவ, கெக்கிராவை |
| | | | | சப்பிரகமுவ மாகாண ஆ. ம. நி. |
| | | | | தெரணியகல, தெஹியோவிட்ட, கலவானை |
| | | | | ஊவா மாகாண ஆ. ம. நி. |
| | | | | பண்டாரவளை, மஹியங்கனை |
| | | | | மத்திய மாகாண ஆ. ம. நி. |

| தொடர் இல. | பாடங்கள் | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | மொழி | வெற்றிடமாகக் காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, மார்கழி மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஐப்பசி 30.

**அட்டவணை**

| மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | கஹவத்த | மடலகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் தம்பதெனி அட்டகலங்கோரளை பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி |

11-723

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மொனராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிகளுக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, மார்கழி மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஐப்பசி 31.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொனராகலை | பிபில | நிகல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பிபில பிரிவில் விவாகப் (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மொனராகலை |

11-783

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை-2012

இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பதவியின் வெற்றிடம் நிரப்புவதற்காக 2012.12.21 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாததும் 30 வயதிற்குக் கூடாததுமான (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல) இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதி 2012.12.21 ஆகும். சகல விண்ணப்பப்பத்திரங் களும் அத்தினத்திற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்பத்திரமாவது தனிப்பட்ட பெயருக்கு அனுப்பிவைத்தலோ அல்லது கையில் கொண்டு பாரம் கொடுத்தலோ கூடாது. பூரணமற்ற, முறையற்ற, தேவையான தராதரங்களை கொண்டிராத முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பப் பத்திரங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளது. விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பில் இந்நகரத்தையும் அதன் இலக்கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்ந்தெடுப்பை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகையைக் கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

**1 ஆம் அட்டவணை**

பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்கள்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பயிற்சித் தரம்

2. **பதவியின், கடமையின் சுபாவம்**.- இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத போக்குவரத்து மேற்கொள்ளும் செயற்பாட்டில் புகையிரத பாதுகாவலர் அலுவலகத்திற்காக விசேடமான தொழில்நுட்ப நிபுணத்துவம் அதாவது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்படி தேசிய தொழில் தராதரம் (NVQ) மட்டம் (5) அல்லது (6) இன்கீழ் அடங்கும் குறித்த தொழில்நுட்ப நிபுணத்துவம் அடங்கலாக புகையிரத போக்குவரத்தை மேற்கொள்ளும் செயற்பாட்டை மேற்கொள்ளல், நடாத்திச் செல்லல் மற்றும் மேற்பார்வை செயற்பாட்டிற்காக வேண்டி தேவையான பொது அடிப்படை தேவைகளை மேற்கொள்ளல்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- பயிற்சிக் காலத்தின் முதல் வருடத்திற்குள் மாதாந்தம் ரூபா 12,920 உம், இரண்டாம் வருடம் மாதாந்தம் ரூபா 13,040 ஆக கொடுப்பனவு வழங்கப்படும்.

பாதுகாவலர் III ஆம் வகுப்புக்காக ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் (எம்என்-3-2006ஏ) ரூபா 15,005-4 x 180-6 x 240- 11 x 320-20 x 360-27,885

4. (அ) ***கல்வித் தகைமைகள் :***

(I) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு விடயங்களில் திறமைச் சித்தி உட்பட க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு விடயங்களில் சித்தியடைந்திருத்தல்

உடன்

(II) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் தூயகணிதம், பௌதிகவியல் மற்றும் மேலும் ஒரு விஞ்ஞான விடயம் உட்பட சகல விடயங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின்கீழ் விஞ்ஞான விடயம் மூன்றில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

(ஆ) ***தொழிற் தகைமைகள்***.- மேலுள்ள (அ) விலுள்ள அடிப்படை கல்வி தராதரத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தராதரங்களில் ஒன்றேனும் விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும் :

(I) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(II) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(III) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(IV) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(V) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறியியலாளர் பரீட்சையில் 1 ஆம் பகுதி சாதகமான முறையில் பூரணப்படுத்தியிருத்தல்

(VI) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களிடம் கருத்து கேட்டறிந்ததன் பின்பு மேலுள்ள தொழில்நுட்ப தராதரங்களுக்கு சகல வழிகளிலும் சமமானதென இலங்கை தொழில்நுட்ப சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தராதரம் பெற்றிருத்தல்.

(ஆ) ***உடற்தகுதி :***

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு சகல வழிகளிலும் உடற்தகுதியை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கேற்ற போதுமான அளவு உடற்தகுதியையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) உயரம் குறைந்தளவு 5 அடி 4 அங்குலமாவதுடன், மூச்சு வெளியிடும்போது நெஞ்சளவு 32 அங்குலத்திற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்.

(iv) கண் பார்வை 6/6, 6/6 அளவில் சித்தியடைதல் வேண்டும்.

(இ) ***வேறு தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

***குறிப்பு***.- இவ் அறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப் படும் தினத்தன்று சகல தராதரங்களையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேலுள்ள (04) பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள தராதரங்களை உடைய விண்ணப்பதாரிகளுக்காகவேண்டி திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சை நடாத்தி பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் வரிசைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும். விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடம் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் எதிர்பார்ப்பு இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட மாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சை உள்ளடக்கம் :**

(i) இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மொழிகளில் நடாத்தப் படும் ;

(ஆ) சகல கேள்வித்தாள்களுக்கும் தோற்ற முடிவது மேற்குறிப்பிட்ட (04) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழிமூலமாகும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) *பரீட்சை விடயங்கள் :*

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்
(ஆ) தொழில்நுட்ப அறிவு

(iv) *விடய உள்ளடக்கம் :*

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்
(காலம் : 1 மணித்தியாலம்) - புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியானதும் விவரமானதும் தெளிவுபடுத்தும் சக்தியையும் சரியான முறையில் நிகழ்வை தீர்மானிக்கும் ஆற்றலையும், பொது அறிவு மற்றும் புத்திக்கூர்மையை அளவிடும் வகையில் குறிக்கோளாகக் கொண்டு இது தயாரிக்கப்படும். இது கணித குளறுபாடு, பொது அறிவு, சூழலுடன் தொடர்புடைய கேள்விகளை உள்ளடக்கிய பலதரப்பட்ட மற்றும் சிறு பதில் வழங்கக்கூடிய அமைப்பிலான கேள்வித்தாளாகும். சகல கேள்விகளுக்கும் பதிலளித்தல் வேண்டும்.

(ஆ) தொழில்நுட்ப அறிவு (காலம் : 3 மணித்தியாலம்)
- புள்ளி 100 ஆகும்.

டீசல் என்ஜின் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவைப் போன்று இயந்திர உபகரணம் சம்பந்தமான அறிவை அளவிடும் வகையில் இது தயாரிக்கப்படும்.

***தேர்ந்தெடுக்கும் முறை.***- ஒவ்வொரு விடயத்திலும் 50 வீத புள்ளிகளை அல்லது அதற்கு கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படுவதுடன், இப்பரீட்சையில் இரண்டு விடயங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடையும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தராதரங்கள் பரீட்சிக்கப்படும். இந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. தராதரங்களைப் பூர்த்திசெய்தவரும், விண்ணப்பதாரிகளிடம் விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களின் தொகைக்கு ஏற்ப இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் பயிற்சி தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

7. **விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல்.**- (i) விண்ணப்பப்பத்திரத்தை ஏ-4 (தட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (தமது கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில்-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 8 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 9 இலிருந்து 11 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகையும்
உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக்கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரத்தை தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பதாரிகள் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பதாரிகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவிலிடும் வகையில் நாட்டின் எந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழன்றுவிடாதவாறு ஒட்டிவிடல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை இணைத்தல் அல்லது வேறேதும் வழிகளில் பணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை தன்னிடம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக இருக்கும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாப்பு பயிற்சி தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை-2012" எனவும் நீர் பரீட்சைக்கு தோற்ற தேர்ந்தெடுத்த நகரத்தையும் அதன் இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(iv) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், அ. நி. சு. இல. 06/2006 இன்படி ரூபா 19,755 ஆன மாதாந்த ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் இப்பதவிக்கு விண்ணப்பதாரி தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தராதரங்களைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை என தெரியவருமிடத்து அவ்விண்ணப்பதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச்செய்யப் படும்.

(vii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு பிறகாவது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும். நீர் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியையும் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியான பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்தையும் உம்முடன் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்தல் மிகவும் பயனுடைய தாகவிருக்கும். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் இவ்வாறான சந்தர்ப்பத்தில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை கேட்கப் படுமிடத்து அச்சந்தர்ப்பத்தில் அதனையும் முன்வைத்தல் வேண்டும்.

(viii) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காக வேண்டி ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப் பட்டுள்ள ஆள் அடையாள அட்டை அல்லது அனுமதிக்கப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமாகும்.

(ix) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தராதரங்களை பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

(x) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாகும். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

8. **சேவை நிபந்தனை.-** ஆட்சேர்ப்பு செய்யப்படுவது பயிற்சித் தரத்திற்காவதுடன், இக்காலத்தில் முதல் வருடத்திற்குள் மாதாந்தம் ரூபா 12,920 ஆன கொடுப்பனவும் இரண்டாம் வருடம் ரூபா 13,040 ஆன கொடுப்பனவும் வழங்கப்படும். பயிற்சிக்காலம் இரு வருடங்களாகும். பயிற்சியை திறமையான முறையில் பூர்த்திசெய்ததன் பின்னர் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் ஆரம்ப சம்பளத்தில் வைக்கப்படுவர்.

9. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.-** (i) இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் ஏற்பாடுகளின்படி அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச மொழி சம்பந்தமான அறிவை 5 வருடங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறாதவர் களின் சம்பள ஏற்றம் சித்தியடையும் வரை வழங்கப்பட மாட்டாது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தாபன செயற்பாட்டு திட்டத்தின் விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் உட்பட்டு செயற்படல் வேண்டும். அதேபோன்று அடிக்கடி அரசினால் விடுக்கப்படும் கட்டளைகள், திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்பட கட்டுப்பட்டுள்ளார்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2012.11.08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(இதன்படி ஏ-4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பு விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலை நன்றாக வாசித்து புரிந்துகொள்ளவும்.)

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

பிரசாவுரிமை :
பரம்பரை மூலம் - 1
பதிவு மூலம் - 2 [ ]
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

| பரீட்சைக்குத் தோற்றுவதற்கு : விண்ணப்பிக்கும் நகரம் : | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பதவியின் பயிற்சித் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை-2012**

Sri Lanka Department of Railways

Written Competitive Examination for Recruitment of External Candidates for the Post of Guard Trainee Grade - 2012

1. முதலெழுத்துக்களை கடைசியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
   (உதா : PERERA, R. M.)
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
3. நிரந்தர முகவரி :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

4. ஆண்/பெண் தன்மை :—

பெண் - 1
ஆண் - 0 ☐
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

5. இனத் தொகுதி :
சிங்களம்-1, இலங்கைத் தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, மலே-6 ☐
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

7. வதிவிடம் :
(i) கிராமசேவையாளர் பிரிவும் இலக்கமும் :————.
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
(iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :–

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) 2012.12.21 ஆந் திகதியன்று வயது :–

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. கல்வித் தராதரம் :
(i) க. பொ. த. (சா. தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |
| (v) | | |
| (vi) | | |
| (vii) | | |
| (viii) | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |

10. நீர் எப்போதாவது எந்த குற்றத்திற்காகவோ நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுள்ளீரா ? ஆம் எனின் விபரம் தருக (ஏற்புடைய கூட்டில் ✓ அடையாளம் இடுக) :

ஆம் ☐ இல்லை ☐

11. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதெனவும் தெரிவிப்பதுடன் இதில் எப்பகுதியாவது பூரணப்படுத்தப்படாததினால் உடன்/அல்லது பிழையான முறையில் உடன்/ அல்லது பொய்யான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் எனது போட்டித் தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதையும் நான் நன்கு அறிவேன் என்றும் அதன் பிரதிபலனை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கிறேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் பொய்யானதென நான் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப் பட்டதன் பிறகு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் ஏற்படும் பிரதிபலனை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) 2012 ............................. ஆந் திகதி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு ரூபா 500 ஐச் செலுத்தி பெற்றுக்கொண்ட இலக்கம் ................................ உடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு இணைக்கவும் (ஒட்ட வேண்டாம்)<br>(இதன் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளவும்) |

(ஈ) இப்பரீட்சை நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயற்பட இணங்கிக் கொள்கிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ அவர்களை நான் நன்றாக அறிவேன் என்றும் அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.
(தயவுசெய்து இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

*13. **திணைக்கள/நிறுவன தலைவரின் உறுதிப்படுத்துகை :***

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைத்துள்ள திரு. ................. .................. அவர்கள் ............................... இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. ஆந் திகதியிலிருந்து .......................... இதுவரை .............................. ஆக சேவை செய்கின்றார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் இல்லை/உண்டு. அவரின் சேவை நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானதாகும்/ திருப்திகரமற்றதாகும். குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அக்காசுக் கட்டளை இணைக்கப்பட்டுள்ளதெனவும் அவர் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் பதவிக்கு தேர்ந் தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத் திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

——————,
திணைக்கள/நிறுவன தலைவரின்
கையொப்பம்.

பெயர் :——————.
பதவிப் பெயர் :——————.
முகவரி :——————.
திகதி :——————.

(தயவுசெய்து இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

11-872

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பு (விசேட ஆளணி) விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட பின்வரும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளுக்கு இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச்சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன:-

| | | |
|---|---|---|
| (1) | தொழில்நுட்பவியல் கல்லூரி | மருதானை |
| (2) | தொழில்நுட்பவியல் கல்லூரி | காலி |
| (3) | தொழில்நுட்பவியல் கல்லூரி | குருநாகல் |
| (4) | தொழில்நுட்பவியல் கல்லூரி | கண்டி |
| (5) | தொழில்நுட்பவியல் கல்லூரி | பதுளை |
| (6) | தொழில்நுட்பவியல் கல்லூரி | அநுராதபுரம் |
| (7) | தொழில்நுட்பவியல் கல்லூரி | அம்பாறை |
| (8) | தொழில்நுட்பவியல் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| (9) | தொழில்நுட்பவியல் கல்லூரி | இரத்தினபுரி |

பதவிகள் விபரம் :

| தொடர் இல. | பதவி | கற்பித்தல் மொழி மூலம் | வெற்றிடம் |
|---|---|---|---|
| 1 | விரிவுரையாளர் (குடிசார் எந்திரவியல்) | ஆங்கிலம் | 07 |
| 2 | விரிவுரையாளர் (மின்னியல் எந்திரவியல்) | ஆங்கிலம் | 02 |
| 3 | விரிவுரையாளர் (உலோக வேலை எந்திரவியல்) | ஆங்கிலம் | 01 |
| 4 | விரிவுரையாளர் (ஒட்டோ மொபைல் எந்திரவியல்) | ஆங்கிலம் | 12 |
| 5 | விரிவுரையாளர் (ஆபரண வடிவமைப்புத் தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் | 02 |
| 6 | விரிவுரையாளர் (உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் | 04 |
| 7 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பவியல்) | ஆங்கிலம் | 05 |
| 8 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில் நுட்பவியல்) | ஆங்கிலம் | 03 |

1. **ஆட்சேர்ப்பு வழிமுறை.**- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் விரிவுரையாளர் வகுப்பு III (விசேட ஆளணி) இற்குரிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவைப் பிரமாணக் குறிப்புரைக்கு அமைவாக நியமனம் வழங்குநர் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சை நடாத்தப்படும்.

(i) *எழுத்துப் பரீட்சை.*- அனுமதி அட்டை வழங்கப்பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைக்கு கட்டாயம் தோற்ற வேண்டும். பரீட்சை ஆங்கில மொழியில் மட்டும் நடாத்தப்படும்.

(ii) *நேர்முகப் பரீட்சை.*- திறந்த போட்டிப் பரீட்சையின் சிறப்பு திறமை வரிசைக்கேற்ப விண்ணப்பதாரிகளுக்கு அடிப்படைத் தகைமைகள் உள்ளனவா என்பது நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது)

2. **விண்ணப்பிக்கும் முறை.**- (i) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இல. 1 தொடக்கம் 6 வரையானவை 1 ஆம் பக்கத்திலும் இல. 7 தொடக்கம் 12 வரையானவை 2 ஆம் பக்கத்திலும் மிகுதியானவை 3 ஆம் பக்கத்திலும் கட்டாயமாக அமையுமாறு, ஆங்கில மொழியில் தங்கள் சொந்த கையெழுத்தில் வேண்டிய விபரங்கள் உள்ளடங்கலாக தெளிவாக விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படி வத்திற்கு அமையாமலும் பூரணமற்ற விபரங்கள் அடங்கியதுமான விண்ணப் பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப் பத்தின் ஒரு ஒளிப்பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை அறிவித்தலில் உள்ளபடி மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு

ஏற்ப, விண்ணப்பங்கள் இணங்குகின்றதா என விண்ணப்பதாரிகளால் செவ்வை பார்க்க வேண்டும். இல்லையெனில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2012.12.24 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் "**பரீட்சை ஆணையாளர் நாயகம், வெளிநாட்டுப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை**" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவை III ஆம் வகுப்பு (விசேட ஆளணி) பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் உரிய விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(iv) உம்மால் உறுதிசெய்யப்பட்ட கீழ்வரும் ஆவணங்களின் பிரதிகள் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

(அ) பதிவுசெய்யப்பட்ட பிறப்பு சான்றிதழ் (சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.) ;

(இ) விபரச் சான்றிதழ் அடங்கலான பட்டதாரி சான்றிதழ் அல்லது ஏனைய கல்விச் சான்றிதழ்கள் ;

(ஈ) வாண்மைத் தொழில் அத்துடன்/அல்லது அனுபவத்தை உறுதிப்படுத்தும் தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியடைந்த உரிய பரீட்சை சான்றிதழ்கள்.

*3.* **சேவை நிபந்தனைகளும் நியமன நியதிகளும்**.- (i) இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் இளைப்பாற்று நிதியத்திற்கு உதவுத் தொகைகள் செலுத்துமாறு வேண்டப்படுவர்.

(ii) மூன்று வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

(iii) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்ற கடப்பாடுடையவர் ஆவர்.

(iv) வினைத்திறமைகாண் தடை.- பொது நிர்வாக சுற்றுநிரூபம் 20/2001 க்கு அமைய பதவியொன்றுக்கு நியமனம் செய்யப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது சம்பளப் படிநிலையின் 4 ஆவது படிநிலையை பெறமுன்னர் 1 ஆவது வினைத்திறமைகாண் தடையினையும் 7 ஆவது படிநிலையைப் பெறமுன்னர் 2 ஆவது வினைத் திறமைகாண் தடையினையும் பூரணப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் வினைத்திறமை காண் தடையைப் பூர்த்தி செய்யாதவர் களது சம்பள ஏற்றம் பிற்போடப்படுவதுடன் அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மிகையாக எடுக்கப்படும் காலம் சம்பள ஏற்றம் பின்போடப்படும் காலமாக கருதப்படும். இவ் உத்தியோகத்தர்கள் தகுதிகாண் தடையைப் பூர்த்தி செய்யும்வரை இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையில் எந்த ஒரு உயர்பதவிக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

(v) இப்பதவிகளுக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் இரண்டாம் மொழியில் தேர்ச்சிபெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். இது பொது நிருவாக சுற்றுநிரூபம் இலக்கம் 7/2007 மற்றும் 07/2007(1) இற்கு ஒருங்கமைவானது.

*4.* **வேதனங்களும் கொடுப்பனவுகளும்**.- மேற்படி பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 -ரூபா 53,555. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன் எஸ்எல்-1-2006 இற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். சம்பள ஏற்றக் கொடுப்பனவு மேலே பந்தி 3 இல் உள்ள (IV) ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு வினைத்திறமைகாண் தடையை பூர்த்திசெய்த வர்களுக்கு உட்பட்டதாகும்.

5. **தேவையான தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்காணும் தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை நிரூபிக்கும் சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பம் முடிவடையும் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) சிறந்த ஒழுக்கப் பண்புகளைக் கொண்டும் உடல் ரீதியில் தகுதி உடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு பட்டம் ;

(உ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 5 வருட கற்பித்தல்/ துறைசார் கள அனுபவம் ;

(ஊ) குறித்தவொரு துறைசார் பாடத்திற்கான விரிவுரையாளர் - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் தொடர்பில், பட்டப்படிப்பில் குறித்த அத்துறைசார் பாடத்தை கற்றிருத்தல் போதுமானதன்று.

(எ) கீழ் குறிப்பிடப்பட்ட ஒன்றோ பல உப துறைகள் கற்பித்தல் அல்லது செயன்முறை அனுபவத்திற்காக உள்ளடங்கி யிருக்கும் :

| தொடர் இல. | பதவி | உப துறை |
|---|---|---|
| 1 | விரிவுரையாளர் (குடிசார் எந்திரவியல்) | - கட்டிட நிர்மாண தொழில்நுட்ப வியல><br>- நெடுஞ்சாலைத் தொழில்நுட்ப வியல்<br>- நீர் வழங்கல் மற்றும் வடிகால் தொழில்நுட்பவியல்<br>- நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் |
| 2 | விரிவுரையாளர் (மின்னியல் எந்திரவியல்) | - வலு உற்பத்தியாக்கல்<br>- பரிவர்த்தனையும் பகிர்ந்தளிப்பும் |

| தொடர் இல. | பதவி | உப துறை |
|---|---|---|
| 3 | விரிவுரையாளர் (உலோக வேலை எந்திர வியல்) | - உலோக வேலை செய்முறை<br>- உலோகப் பாதிப்பு<br>- உலோக வேலைக்குப் பயன்படுத்தும் மூலப்பொருளை அடையாளம் காணுதலும் உலோக வேலை செய்முறையை தெரிவுசெய்தலும்<br>- உலோக உபகரண மற்றும் சாதன அட்டவணையை பராமரித்தலும் கட்டுப்படுத்தலும்<br>- வெப்ப சீராக்கம் |
| 4 | விரிவுரையாளர் (ஒட்டோ மொபைல் தொழில்நுட்பவியல்) | - டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரம்<br>- மோட்டார் வாகன மின்னிணைப்பு<br>- மோட்டார் வாகன குளிரூட்டல் |
| 5 | விரிவுரையாளர் (ஆபரண வடிவமைப்பு தொழில்நுட்பவியல்) | - ஆபரண உபகரண பராமரிப்பு<br>- ஆபரண வடிவமைப்பு<br>- ஆபரண உற்பத்தி |
| 6 | விரிவுரையாளர் (உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியல்) | - நுண்கணனி வன்பொருள் செய்முறைகளும் பிரச்சினை சுடுதலும்<br>- அரை நடத்து சாதனங்களும் அனலொக் சுற்றுக்களும்<br>- டிஜிட்டல் இலத்திரனியல் பிரயோகங்கள்<br>- உயிரியல் மருத்துவ உபகரண இயக்குகையும் பராமரிப்பும் |
| 7 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்) | - பல் ஊடக எறிகை<br>- வலையமைப்பு<br>- வன்பொருள் மற்றும் மென் பொருள் |
| 8 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல்) | - ஆளியிடல், வலையமைப்பு, பரிவர்த்தனை மற்றும் உபகரண பராமரிப்பு |

*6.* **பாடத்திட்டம்** :

(i) *எழுத்துப் பரீட்சை.-* பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும் :

பொது அறிவு (*காலம் : 01 மணித்தியாலம்*)

- புள்ளிகள் 100

தேசிய, சர்வதேச மட்டத்தில் காணப்படும் பொருளியல், சமூக, அரசியல் மற்றும் புவியியல் தொடர்பான அறிவினை பரீட்சார்த்திகளிடம் மதிப்பிடும் வகையில் இவ் வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருப்பதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

பொது உளச்சார்பு (*காலம் : 01 மணித்தியாலம்*)

- புள்ளிகள் 100

இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்திகளின் தர்க்க ரீதியான சிந்தனை, அவர்களின் தீர்மானம் எடுக்கும் திறன், நுண்ணறிவு என்பவற்றை மதிப்பீடு செய்யும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருப்பதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

(ii) *நேர்முகப் பரீட்சை.-* முன்னுரிமைப் பட்டியலின் அடிப் படையில் ஆட்சேர்ப்பதற்கு தேவையான மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருப்பதுடன் ஒவ்வொரு பாட பரீட்சையிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு பாடத்துறைகளிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

*7.* ***பரீட்சைத் திகதி.-*** (i) *2013* ஆம் ஆண்டு பங்குனி மாதம் கொழும்பில் இப்பரீட்சை நடைபெறும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கும் இரத்துச்செய்வதற்கும் பொதுச்சேவை ஆணைக்குழு அறிவுறுத்தலுக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரிமை உண்டு.

(ii) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கிய பிற்பாடு, உடனடியாக பரீட்சைகள் திணைக்களத்தினால் அதுபற்றிய ஒரு பத்திரிகை குறிப்பு வெளியிடப்படும். இவ்வெளியீட்டின் பின்னரான 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் அவ்வெளியீட்டில் குறித்துரைக்கப்பட்டபடி பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் பேணப்படும் விண்ணப்பத்தின் உறுதிப்படுத்திய ஒரு நிழற்பிரதி, தபாலில் பதிவுசெய்த இரசீது மற்றும் கொழும்புக்கு வெளியே அனுமதி அட்டையை அனுப்பவேண்டி ஏற்படின் அதற்கு ஏதுவான தொலைநகல் இலக்கம் அடங்கலாக வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பித்தல் மிகவும் அனுகூலமானது.

***பரீட்சைக்கான அனுமதி.-*** (அ) அனுமதி அட்டைகளை பரீட்சை ஆணையாளர் நாயகம் வழங்குவார். பரீட்சார்த்தி தனது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரிடம் கையளிப்பது கட்டாயமானதாகும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியை இழப்பார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தி பரீட்சை முதல் நாளன்று மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளுக்குமான ஒரு தொகுதி ஒழுங்குவிதிகள் வர்த்தமானி ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்காக ஒழுங்கு நடைமுறைகளை பரீட்சார்த்திகள் கடைப்பிடிக்க வேண்டும் எனவும், அவன்/அவள் அதிலிருந்து விலகும் பட்சத்தில் தண்டனைக்கு ஆளாவார்.

(இ) *பரீட்சார்த்தியின் அடையாளம்.-* பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் ஒவ்வொரு பாடத்திற்கும் கேட்கும் வகையில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப் படும் :-

- ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
- செல்லுபடியான கடவுச்சீட்டு.

**பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான குற்றம்.**- பரீட்சார்த்தி ஒருவர் பொருத்தமற்ற தகவல்கள் தந்தமை கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தி தகைமை பரீட்சையின்போது, முன்னர் அல்லது பின்னர் எக்கட்டத்திலும் நீக்கப்படலாம். பரீட்சார்த்தி ஒருவரால் வழங்கப்பட்ட தகவல் அவரால் அறிவுக்குட்பட்ட வரையில் தவறெனின் பொதுச்சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

8. **பரீட்சைக் கட்டணம்.**- மீளளிக்கப்படாத பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஐ விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னராக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் "பணிப்பாளர் நாயகம், தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் என்ற பெயரிலான 176-1001-39026228 என்னும் (மிட் சிற்றி கிளை)" கணக்கு இலக்கத்தில் வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பகுதியில் ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியை பரீட்சார்த்திகள் வைத்திருப்பது உபயோகமானது.

9. தாபனக்கோவையின் அத்தியாயம் II இன் பிரிவுகள் 10-12 இன் வாசகங்களும் இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரமாகும் அரசாங்க சேவை பதவிகளுக்கு மேற்கொள்ளும் நியமனங்கள் தொடர்பாக பொருத்தமுடைய பொது நிபந்தனைகளுக்கும் மற்றும் 1986.08.15 ஆந் திகதிய 415 ஆம் இலக்க பகுதி I : தொகுதி (I) இல் வர்த்தமானியில் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கும், உமது கவனம் ஈர்க்கப்படுகிறது.

10. பரீட்சை ஆணையாளரினால் சட்டவாக்கம் பெற்ற பரீட்சைகள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குப் பிரமாணங்களுக்கு பரீட்சார்த்தி கடப்பாடுடையவராவார். மீறப்படுமாயின் பரீட்சை ஆணையாளரினால் சட்டவாக்கம்பெற்ற தண்டனைக்கு பரீட்சார்த்தி ஆளாவார்.

11. வெற்றிடங்களின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ நிரப்பாமல் விடும் உரிமை பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

கே. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும்
திறன் அபிவிருத்தி அமைச்சு.

இளைஞர் அலுவல்கள் மற்றும்
திறன் அபிவிருத்தி அமைச்சு,
2012.11.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின்கீழ் இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) விரிவுரையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012

| விண்ணப்பிக்கும் பதவி | பதவி இல. |
|---|---|
| | |

வர்த்தமானி அறிவித்தல் 1 ஐப் பார்க்கவும். தெரிவினை பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் (முதல் எழுத்துக்கள் இறுதியில்) : (ஆங்கில அச்செழுத்துக்களில்) உ-ம் : சில்வா, ஏ. பி.

2. முழுப் பெயர் :-
.................................................................................
.................................................................................
.................................................................................

3. (அ) அலுவலக முகவரி :-
.................................................................................
.................................................................................
.................................................................................

(ஆ) சொந்த முகவரி (ஆங்கில அச்செழுத்துக்களில்) :-
(அனுமதி அட்டை கிடைக்க வேண்டிய முகவரி)
.................................................................................
.................................................................................
.................................................................................

(இ) தனிப்பட்ட தொலைபேசி இல :.............................................

4. (அ) இலங்கைப் பிரசையா? :-

ஆம் ☐ இல்லை ☐

5. (அ) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ஆ) தேசிய அடையாள அட்டை இல. :-

6. விண்ணப்பம் முடிவடையும் திகதியில் வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

7. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரங்கள் :-

(அ) பதவியும் நியமனத் திகதியும் :-----.
(ஆ) பதவி நிரந்தரமானதா ? தற்காலிகமானதா? :-----.
(இ) ஓய்வூதியம் உரித்துடையதா ? ஓய்வூதியம் உரித்தற்றதா? :---.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :-----.
(உ) திணைக்களம் :-----.
(ஊ) நிறுவனம் /பணிபுரியும் இடம் :-----.

8. கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் (சிங்களம்/தமிழ் மொழியில் தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் உட்பட)

| பரீட்சை | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | வருடம் | பாடத்துறை |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

9. கற்பித்தல்/துறைசார் கள அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | பெறப்பட்ட சான்றிதழ் | காலம் | பாடத்துறை/ தொழில்சார் துறை |
|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | | |

(தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

10. முன்னைய நியமனங்கள் (சரியான திகதிகளுடன் காலவரன் ஒழுங்கில் குறிப்பிடவும்) :-

| திணைக் களம்/ நிறுவனம் | வேலை செய்த இடம் | பதவி | பதவி நிரந்தர மானதா அல்லது தற்காலிக மானதா? | இருந்து | வரை | காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | | | | |

11. உமக்கு எதிராக சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :----.

12. அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் அல்லது சபை/கூட்டுத்தாபனம் ஒன்றில் இதற்கு முன் சேவையாற்றி இருப்பின் அச்சேவை முடிவுறுத்தப்பட்டதற்கான காரணம் :-----.

13. உமக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணைகள் நிலுவையிலுள்ளதா ? அவ்வாறாயின் விபரங்களை சுருக்கமாகத் தருக :-----.

| |
|---|
| பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு<br>ஒட்டப்பட வேண்டிய இடம் |

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிகூறுகின்றேன். தெரிவின் முன்னராக இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நியமனத்தின் பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடுமின்றி தகைமையற்றவராக கருதி பதவியிலிருந்து விலக்கப்படுவதற்குப் பாத்திரமாவேன் எனவும் நான் நன்கு அறிவேன். மேலும் பரீட்சை தொடர்பான பரீட்சைகள் ஆணையாளரினால் சட்டவாக்கம் பெற்ற விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு நான் கடப்பாடுடையவர் என வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***அரச மற்றும் மாகாண அரச சேவை விண்ணப்பதாரிகளுக்கானது.***

***திணைக்களத் தலைவரின் சிபாரிசு.-***

மேற்படி அலுவலரின் இல. 10 தொடக்கம் 13 வரையான தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் சரியான பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுமுள்ளது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

11-871

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.